27-09-2012 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : 9/11 மூலம் உலக ஒழுங்கை விளங்கிக்கொள்ளல்**

**திறந்த கலந்துரையாடல்**

அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் மீதான தாக்குதலை அச்சம்பவம் நிகழ்ந்து 11 ஆண்டுகளின் பின் எவ்வாறு விளங்கிக்கொள்வதென்பதும் அந்நிகழ்வு கடந்த ஒரு தசாப்த காலமாக எவ்வாறு உலகநிகழ்வுகளின் போக்கில் செல்வாக்குச் செலுத்தியது என்பதையொட்டியே உரையாடல் நடைபெற்றது.

9/11ஐ எவ்வாறு விளங்கிக் கொள்ளலாம் என்பதை சிந்தனையாளர் பியே போர்த்தியோ (Pierre Bourdieu) அழகாகச் சொல்லுவார், "விளையாட்டுச் சீட்டுகள் எல்லாவற்றையும் தன்னிடமே வைத்துக்கொண்டு விளையாட நினைக்கும் ஒருவனிடம், மறுதரப்பானது விதிகளை மாற்றி விளையாட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகிறது. அந்த விதிகளை மாற்றி விளையாட வேண்டிய கட்டாயத்திலும் கூட நியாயமான விதிகளை மாற்றி விளையாட முடியாத நிலவரத்தில் நியாயமில்லாத விதிகளைப் பின்பற்றவேண்டிய நிலைக்கு மாற்றுத்தரப்பு தள்ளப்படுகிறது".

9/11 நிகழ்வானது அமெரிக்காவாலும் சவூதி அரேபியாவாலும் இணைந்து திட்டமிட்டு நடத்தப்பட்ட என்ற வலுவான ஐயம் பலர் மத்தியில் இருக்கிறது. 1990 இல் சோவியத் யூனியனின் உடைவின் பின்னணியில் அமெரிக்காவின் பொது எதிரி இல்லாமலாக்கப்படுகிறது.

அதைத் தொடர்ந்து தனது அலுவல்களை நிறைவேற்றவும் நியாயப்படுத்தவும் பொது எதிரியின்மையால் சிக்கல்லை அமெரிக்க எதிர்கொண்ட வேளையில் இஸ்லாமும் முஸ்லீம்களும் புதிய பொது எதிரி உருவாக்கத்திற்காக பயன்படுத்தப்படும் வண்ணம் அமெரிக்காவால் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட நிகழ்வே 9/11 என்ற வாதம் வலுக்கிறது.

9/11 என்பது, கெடுபிடிப் போரின் முடிவின் பின்னரான ஒற்றைப் பரிமாண உலக ஒழுங்கை முற்றுமுழுதாக உலுக்க முனைந்த ஒரு சம்பவம்.

எனவே, அந்த ஒற்றைப் பரிமாண உலக ஒழுங்கின் விளைவாகவும் 9/11ஐப் பார்க்க முடியும். ஒருவகையில் 1990களின் பின்பு தீவிரமடைந்து துரிதப்படுத்தப்பட்ட உலகமயமாக்கலின் எதிர்வினையாகவும் 9/11ஐ விளங்கிக் கொள்ளலாம்.

> இன்றும் புது எதிரி உருவாக்கத்தில் ஏகாதிபத்தியம் சிக்கல்களை எதிர்கொள்வதால் இஸ்லாம் தொடர்ந்தும் பொது எதிரியாக நிலைக்கிறது.
>
> அரபுலகில் ஏற்பட்ட மக்கள் எழுச்சிகள் அமெரிக்காவின் 9/11க்கு பின்னரான நிகழ்ச்சி நிரலுக்கு புதிய பரிமாணத்தை அளிக்கிறது.

இந்நிகழ்வின் பின் நிகழ்ந்த ஆப்கான் மீதான தாக்குதலானது, புதிய உலக ஒழுங்கில் சட்டரீதியாக நாடுகளைத் தாக்குவதற்கான 3 சாட்டுகளுக்கு சட்ட அந்தஸ்த்தைப் பெற்றுக்கொடுத்தது.

1. அமெரிக்காவினுடைய தன்னிச்சையான தலையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டது

2. அமெரிக்காவின் "தற்பாதுகாப்புக்கான தாக்குதல்" (self defence) என்ற வாதம் ஏற்கப்பட்டமை

3. மனிதாபிமான நடவடிக்கை (humanitarian mission) என்று அதற்கு ஐக்கிய நாடுகள் சபை அங்கீகாரம் வழங்கியமை

மிகுதி அடுத்த பக்கம்

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

**கூடங்குளம் அணு உலை சார்ந்து எழுந்துள்ள எதிர்ப்பலைகள்**

த. வி. ரிஷாங்கன் | 04-10-2012



எரிக் ஹாபஸ்பாம்

**எரிக் ஹாபஸ்பாம்** (Eric Hobsbawm, **பிறப்பு ஜூன்** 9, 1917. **இறப்பு ஒக்டோபர்** 1, 2012) ஒரு பிரித்தானிய மார்க்சிய சிந்தனையாளர் மற்றும் வரலாற்றாசிரியர்.

ஹாப்ஸ்பாம் ஐரோப்பிய வரலாறைப்பற்றிய அவரது மூன்று நூல்களுக்காகவே பெரிதும் மதிக்கப்படுகிறார். பத்தொன்பதாம் நூற்றாண்டைப்பற்றி அவர் எழுதிய

**புரட்சியின் யுகம்** (The Age of Revolution: Europe 1789-1848)

**முதலியத்தின் யுகம்** (The Age of Capital: 1848-1875)

**சாம்ராஜ்ய யுகம்** (The Age of Empire: 1875-1914)

ஆகிய நூல்கள் செவ்வியல் ஆக்கங்கள் என கருதப்படுகின்றன. ஹாப்ஸ்பாம்எழுதிய மார்க்ஸிய நூல்கள் மார்க்ஸிய ஆய்வால்ர்கள் நடுவே செல்வாக்குடன் உள்ளன

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772260165
0752151580

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## 9/11 மூலம் உலக ஒழுங்கை விளங்கிக் கொள்ளல்

முன்பக்கத் தொடர்ச்சி..

இதே நடைமுறைகள் தான் இன்று இதன்பின்னரான அமெரிக்கா தொடுத்த போர்களிலும் 'பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்" என்ற பேரில் பல நாடுகள் தங்கள் உள்நாட்டலுவல்களிலும் பின்பற்றப்பட்டன. இலங்கையில் இறுதியுத்தமானது மக்களை பயங்கரவாதிகளிடமிருந்து மீட்பதற்கான 'மனிதாபிமான நடவடிக்கையாகவே" சொல்லப்பட்டது.

9/11 இன்பின் அமெரிக்க ஜனாதிபதி புஷ் 'நீங்கள் எங்களோடு இருக்கிறீர்கள், அல்லது பயங்கரவாதிகளோடு இருக்கிறீர்கள்" என அறிவித்து உலகை மீண்டும் இரு சாராருக்குரியதாக்கியதோடு அமெரிக்காவுக்கோ அல்லது பயங்கரவாதிகளுக்கோ ஆதரவில்லாத நடுநிலையாளர்கள் என்ற ஒரு பிரிவே இல்லாமலாக்கப்பட்டது. இதே சூத்திரம் எல்லா நாடுகளிலும் பயன்படுத்தப்பட்டது.

11 ஆண்டுகள் கடந்த நிலையில் 3 முக்கிய நிகழ்வுகள் இது சார்பாக நிகழ்ந்துள்ளன:

1. ஒசாமா பின் லாடன் கொல்லப்பட்டிருக்கிறார்.

2. ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறுகின்றன.

3. ஆப்கானிலிருந்து முழுமையாக வெளியேறுவதாக அமெரிக்கா அறிவித்தமை.

9/11 இன் விளைவால் உருவான 'பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்" இன்று வேறு திசைகளைத் தேடுகிறது. அமெரிக்காவின் பொருளாதார நெருக்கடி, மூலதனமும் இலாபமும் மட்டுமன்றி பயங்கரவாதமும் உலகமயமாகும் என்ற உண்மை பலருக்கு உறைக்கின்றது. உலகமயமாக்கல் தவிர்க்கவியலாமல் நெருக்கடியை எதிர்நோக்குகிறது.


பொருளாதாரதே சந்தையைத் தீர்மானிப்பது போல தேசியப் பாதுகாப்பே பூகோள அரசியரலைத் தீர்மானிக்கிறது. அவ்வகையில் பொருளாதார நெருக்கடியின் விளைவால் ஏற்பட்ட நெருக்கடிகளைத் தவிர்க்கவும் திசைதிருப்பவும் படைகளை ஈராக்கிலிருந்தும் ஆப்கானிலிருந்தும் விலக்கிக் கொள்ள நேர்கிறது.

வெல்லவே முடியாத போரில் வெளியேறுவதே வழி என தசாப்தகாலத்தின் பின் அமெரிக்கா உணருகிறது.

இன்று பயங்காரவாதம் குறித்த பயத்தை பொருளாதார வீழ்ச்சி குறித்த பயங்கள் கீழ்த்தள்ளி முக்கியமற்றவையாக்குகின்றன. இன்று பயங்கரவாதம் குறித்த சவால்களை விட ஐரோப்பிய பொருளாதார நெருக்கடி, அமெரிக்கப் பொருளாதாரத்தின் வீழ்ச்சி, சீனாவின் வளர்ச்சி என்பனவே பாரிய சவால்களாகவும் நெருக்கடிகளாகவும் தெரிகின்றன.

இன்றும் புது எதிரி உருவாக்கத்தில் ஏகாதிபத்தியம் சிக்கல்களை எதிர்கொள்வதால் இஸ்லாம் தொடர்ந்தும் பொது எதிரியாக நிலைக்கிறது. அரபுலகில் ஏற்பட்ட மக்கள் எழுச்சிகள் அமெரிக்காவின் 9/11க்கு பின்னரான நிகழ்ச்சி நிரலுக்கு புதிய பரிமாணத்தை அளிக்கிறது.

அதேவேளை தென்னமரிக்க நாடுகளில் நடந்துவரும் ஆட்சிமாற்றங்கள், அமெரிக்க எதிர்ப்பு அப்பிராந்தியத்தில் அதிகரித்தல் என்பன 'பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்" என்பதை அமெரிக்கா தொடர்ச்சியாக தக்கவைக்க வேண்டிய தேவை இருக்கிறது. இவை புதிய போக்கில் உலகைத் திருப்புகின்றன.




**கூடங்குளம் அணு உலை சார்ந்து எழுந்துள்ள எதிர்ப்பலைகள்.**

(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு )

அணுமின் வலு தொடர்பான அறிமுகம்

அணுமின் வலுவினால் ஏற்படும் அபாயங்களும் அணு உலைக் கழிவும்

இன்று உலக அளவில் அணு உலைக்கெதிரான போக்குக்கள்

கூடங்குளம் அணு உலையினதும் அதற்கெதிரான இயக்கத்தினதும் வரலாறு

எதிர்ப்புப் போராட்டங்களின் தற்போதைய நிலையும் அதன் அரசியல் அடிப்படைகளும்

கூடங்குளம் விவகாரத்தில் CPI, CPM உட்பட்ட பாராளுமன்றக் கட்சிகளின் நிலை

போராட்டம் சமூக அமைப்பிலும் தமிழக அரசியலிலும் ஏற்படுத்தியுள்ள தாக்கம்

கூடங்குளம் அணு உலையினதும் அதற்கெதிரான போராட்டங்களதும் எதிர்காலம்

போராட்டத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
CC BY NC SA